இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 20-11-2024

# நிதியில் நீதி வேண்டும்!

**செ**ன்னையில் நடைபெற்ற 16 ஆவது நிதிக்குழுக் கூட்டத்தில் பங்கேற்ற தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள், ‘தமிழ்நாட்டுக்கு நிதி வேண்டும்’ என்ற கோரிக்கையை வைக்காமல், ‘தமிழ்நாட்டுக்கு வழங்கப்படும் நிதியில் நீதி வேண்டும்’ என்ற தன்மையோடு கோரிக்கை வைத்துள்ளார். இது தமிழ்நாடு என்ற தனிமாநிலத்துக்கான கோரிக்கை மட்டுமல்ல, ஒட்டுமொத்தமாக இந்திய மாநிலங்கள் அனைத்துக்குமான கோரிக்கையாக அமைந்துள்ளது. மாநில உரிமைகளை நிலைநாட்டி, இந்தியாவின் கூட்டாட்சித் தன்மையை நிலைநாட்டும் உரையாக மாண்புமிகு முதலமைச்சரின் உரை அமைந்திருந்தது.

**16 ஆவது நிதிக்குழுவின் தலைவராக இருப்பவர் அரவிந்த் பனகாரியா. இதுவரை 12 மாநிலங்களுக்கு இக்குழு சென்றுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சரின் உரையும், தமிழ்நாடு அரசின் நிதித் துறை அளித்த விளக்கமும் அவருக்கு மிகப்பெரிய கண்திறப்பாக அமைந்திருந்தது. இதனை அவரே செய்தியாளர்கள் கூட்டத்தில் வெளிப்படுத்தி இருக்கிறார். தமிழ்நாடு அரசின் விளக்கமானது மிகச் சிறந்தது என்று பாராட்டி இருக்கிறார் அரவிந்த் பனகாரியா.**

இந்தியாவின் மிகப்பெரிய பொருளாதாரம் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு இன்று வளர்ந்து நிற்கிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.87 விழுக்காடு என்ற அளவில் தமிழ்நாடு பங்களிப்பினை வழங்குகிறது. 2030-ம் ஆண்டுக்குள் ஒரு லட்சம் கோடி டாலர் பொருளாதாரத்தினை அடைவதற்கான பெருங்குறிக்கோளினை தமிழ்நாடு இலக்காக நிர்ணயித்துள்ளது. இதற்கான பங்களிப்பை ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டும் என்பதுதான் தமிழ்நாடு அரசு 16 ஆவது நிதிக்குழுவிடம் வலியுறுத்தியது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.87 விழுக்காடு அளவில் தனது பங்கினைச் செலுத்தும் மாநிலத்துக்கு அதற்கு இணையான நிதியைத் தருவதுதானே நீதியாக இருக்க முடியும் என்பதுதான் தமிழ்நாடு அரசு எழுப்பும் கேள்வியாகும்.

**“ஒன்றிய அரசால் பகிர்ந்தளிக்கப்படும் நிதியிலிருந்து குறைந்தபட்சமாக 50 சதவீதம் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும். வரி அல்லாத வருவாய்களையும் பகிர்ந்தளிக்கப்படும் நிதிகளின் தொகுப்பில் இணைப்பதற்கு உரிய அரசமைப்புச் சட்டத் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். அல்லது பகிர்ந்தளிக்கக் கூடிய தொகுப்பில் மாநிலங்களுக்கான பங்கினை அதிகரித்து வழங்க வேண்டும். மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்கள் பத்து சதவீதத்திற்கு மிகாமல் விதிக்கும் வகையில் ஒரு செயல்முறையினை வரையறுக்க வேண்டும். அதற்குமேல், வசூலிக்கப்படும் கூடுதல் தொகை பகிர்ந்தளிக்கப்படும் தொகுப்பில் இணைக்கப்பட வேண்டும். மாநில அரசின் பட்டியலில் இடம் பெற்றுள்ள இனங்களின் கீழ் நிறைவேற்றப்படும் நலத்திட்டங்களுக்கு 75 சதவீத பங்களிப்பை ஒன்றிய அரசு வழங்க வேண்டும். மாநில பேரிடர் மேலாண்மை நிதியினை 2026-27 ஆம் ஆண்டு காலகட்டத்தில் 50 சதவீதமாக உயர்த்தி, 90:10 என்ற அளவில் ஒன்றிய - மாநில நிதிப் பங்கீட்டில் வழங்க வேண்டும். பரிந்துரை காலத்தில் செயல்படுத்துவதற்கான நிதி அளவுகளில் ஆண்டுக்கு 5 சதவீதம் என்ற அளவிலிருந்து 10 சதவீதம் என்ற அளவில் உயர்த்தப்பட வேண்டும்.”** என்ற கோரிக்கைகளை தமிழ்நாடு அரசு வைத்துள்ளது.

இக்கோரிக்கைகளுக்கான நியாயத்தை முதலமைச்சர் அவர்களது உரை மிக அற்புதமாக விளக்கியது. ஒன்றிய அரசிற்கும் பல்வேறு மாநில அரசுகளுக்கும் இடையேயான அதிகார பகிர்வு மற்றும் பொறுப்புகளை இந்திய அரசியலமைப்புச் சட்டம் எப்படி வரையறுத்துத் தந்திருக்கிறது என்பதை முதலமைச்சர் அவர்கள் விளக்கினார்கள்.

சுகாதாரம், கல்வி, சமூகநலம் மற்றும் வேளாண்மை போன்ற துறைகளின் முன்னேற்றத்திற்கான பல முக்கியமான திட்டங்களை வடிவமைத்து நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்புகளை பெரும்பாலும் மாநில அரசுகள்தான் நிறைவேற்றி வருகின்றன, எனவே மாநில அரசுகளுக்குத் தான் நிதித் தேவை அதிகமாக இருக்கிறது என்று நடைமுறை உண்மையோடு கோரிக்கை வைத்தார் முதலமைச்சர் அவர்கள்.

கடந்த 15-வது நிதிக்குழுவின் பரிந்துரைகளின்படி மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கக்கூடிய வரி வருவாய்ப் பங்கினை 41விழுக்காடாக உயர்த்தியது. ஆனால் ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டுக்கு தருவது 33.16 விழுக்காடு மட்டும்தான். உண்மையில் 50 விழுக்காடு நிதி மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

ஒன்றிய அரசும் மாநில அரசுகளும் இணைந்து செயல்படுத்தும் திட்டங்களுக்கு மாநில அரசின் பங்கு அதிகமாகி வருகிறது, ஒன்றிய அரசு தரும் நிதி குறைந்து வருவதை விளக்கினார் முதலமைச்சர் அவர்கள்.

**“சமச்சீரான வளர்ச்சியையும், திறமையான நிர்வாகத்தையும் இந்த வரிப் பகிர்வு முறையில் சமக் குறிகோள்களாகக் கருதி இந்த நிதிக் குழு தனது பரிந்துரைகளை வழங்கும் என்று நம்புகிறோம். நாட்டின் சமச்சீரான வளர்ச்சியை எதிர்நோக்கும் வகையில் வளர்ச்சி குன்றிய பகுதிகளுக்கு தேவையான நிதியை வழங்குவதுஅவசியம் என்றாலும் அதே வேளையில், பல்வேறு வகையிலும் சிறப்பாக செயல்படும் மாநிலங்களுக்கு தேவையான நிதி ஆதாரங்களை அளிப்பதன் மூலமாகவே அவற்றின் வளர்ச்சியைத் தக்கவைப்பதுடன் அந்த மாநிலங்களின் வளர்ச்சிப்பாதைக்கும் வழிவகுக்க முடியும், என்பதையும் நிதிக் குழு கவனத்தில் கொள்ள வேண்டும். சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களுக்கான நிதியைக் குறைத்து வளர்ச்சியை எதிர்நோக்கும் பகுதி களுக்கு நிதி ஆதாரங்களைமடைமாற்றுவதன் மூலம் ஒட்டுமொத்த நாட்டின் வளர்ச்சி பாதிக்கப்படுவது மட்டுமின்றி, வளர்ச்சி குன்றிய மாநிலங்களுக்கு இறுதியாக கிடைக்கும் வரிப்பகிர்வும் குறைந்துவிடும் என்பதே உண்மை”** என்பதே முதலமைச்சரின் உரையின் மிக முக்கியமான இதயம் போன்ற பகுதியாகும்.

இந்தியக் கூட்டாட்சி, ஒருமைப்பாடு, மாநில உரிமைகள், வளர்ந்த மாநிலங்கள், வளர்ச்சி குன்றிய மாநிலங்கள் ஆகிய ஐந்து நிலைகளையும் சீர்தூக்கிப் பார்த்து மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையானது இந்திய நிதி நிர்வாகத்துக்கான மிகச் சிறந்த வழிகாட்டியாக அமைந்துள்ளது. அதனால்தான் 16 ஆவது நிதிக்குழுத் தலைவர் பாராட்டி இருக்கிறார். பாராட்டுடன் சேர்த்து செயல்பாட்டையும் தமிழ்நாடு எதிர்பார்த்துக் காத்திருக்கிறது.






**அரியலூர் மாவட்டத்திலுள்ள 12 ஒன்றியக் கழகச் செயலாளர்களுக்கும் பிரச்சார வாகனங்களை அமைச்சரும், மாவட்டக் கழகச் செயலாளருமான சா.சி.சிவசங்கர் முன்னிலையில் முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

### அரியலூர் மாவட்டத்திலுள்ள

# 12 ஒன்றியச் செயலாளர்களுக்கும் பிரச்சார வாகனங்கள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் முன்னிலையில் முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

அரியலூர், நவ. 20-

அரியலூர் மாவட்டக் கழகத்தின் சார்பில், மாவட்டக் கழகத்தில் உள்ள அனைத்து(12) ஒன்றியங்களுக்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் தலைமையில் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து அந்த மேடையிலேயே பிரச்சார வாகனங்களை ஒன்றியக் கழகச் செயலாளர்களுக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, கழகத் துணைப் பொதுச் செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் சி. வி.கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர் தொல். திருமாவளவன்,

கழக சட்டதிட்ட திருத்த குழு துணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர், சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன், மாவட்ட துணைச் செயலாளர் மு.கணேசன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் தனசேகர், இரா.மணிமாறன், ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள், நகரக் கழகச் செயலாளர் வெ.கொ.கருணாநிதி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் உள்ளிட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

# செவித்திறன் இழந்த ஏழை குழந்தைகளுக்கு இலவச அறுவை சிகிச்சை!

## சன் டி.வி. ரூ. 1 கோடி நிதியுதவி!



சென்னை, நவ. 20 -

செவித்திறன் இழந்த மற்றும் கேட்கும் திறன் பாதிக்கப்பட்ட ஏழைக் குழந்தைகளுக்கு இலவச அறுவை சிகிச்சை செய்வதற்காக சன் டி.வி. குழுமம் ஒரு கோடி ரூபாய் நிதி உதவி அளித்துள்ளது.

முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் நினைவாக, ஏழை எளியோரின் கல்வி, மருத்துவ சிகிச்சை, சமூக மேம்பாடு உள்ளிட்ட நலத் திட்டங்களுக்காக சன் பவுண்டேஷன் மற்றும் சன் டி.வி. பல்வேறு அமைப்புகளுக்கு நிதி உதவி வழங்கி வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, ஏழைக் குழந்தைகளுக்கு இலவச அறுவை சிகிச்சை செய்வதற்காக மெட்ராஸ் காது மூக்கு தொண்டை ஆராய்ச்சி மருத்துவமனைக்கு சன் டி.வி. ஒரு கோடி ரூபாய் நிதி உதவி அளித்துள்ளது. இதற்கான காசோலையை, மருத்துவமனையின் தலைவர் டாக்டர் மோகன் காமேஸ்வரனிடம் சன் டி.வி. குழுமம் சார்பில், மல்லிகா மாறன், காவேரி கலாநிதி மாறன் வழங்கினர்.

இந்த நிகழ்ச்சியில் மருத்துவமனை நிர்வாகிகள் ஆனந்த் குமார், ஜெகநாதன், இந்திரா காமேஸ்வரன், உமா மகேஸ்வரி கலந்துகொண்டனர்.

இந்த நிதியின் மூலம் பிறவியிலேயே செவித்திறன் இழந்த மற்றும் கேட்கும் திறன் பாதிக்கப்பட்ட 11 ஏழைக் குழந்தைகளுக்கு காக்லியர் இம்ப்லாண்ட், ஆடிட்டரி ப்ரைன் ஸ்டெம் இம்ப்லாண்ட், போன் பிரிட்ஜ் இம்ப்லாண்ட் உள்ளிட்ட நவீன அறுவை சிகிச்சைகள் இலவசமாக மேற்கொள்ளப்படும் என்று மெட்ராஸ் காது மூக்கு தொண்டை ஆராய்ச்சி மருத்துவமனையின் தலைவர் டாக்டர் மோகன் காமேஸ்வரன் தெரிவித்தார்.

ஏழை எளியோருக்கு கல்வி, அடிப்படை கட்டமைப்புகள் மற்றும் கற்றல் சூழலை மேம்படுத்துதல், தரமான இலவச சிகிச்சை, மகளிர் மற்றும் இளைஞர் நலன், கிராமப்புற மேம்பாடு உள்ளிட்ட நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக சன் டி.வி.யும் சன் பவுண்டேஷனும் தொடர்ந்து நிதி உதவி அளித்து வருவது குறிப்பிடத்தக்கது.

### மானாமதுரையில்

# துணை முதல்வர் பிறந்த நாள் விழா!

சிவகங்கை, நவ. 20 -

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகரக் கழக நிர்வாகிகள் கூட்டம் அவை தலைவர் ரவிச்சந்திரன் தலைமையில் நகரச் செயலாளர் க.பொன்னுச்சாமி முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் இளைஞரணி உறுப்பினர் சேர்த்தல், பாகமுகவர்கள் வாக்காளர் பட்டியல் திருத்தத்தில் மேற்கொள்ள வேண்டிய பணியில் குறித்து மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கே.எம்.பொற்கோ சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. வருகிற 27ஆம் தேதி கழக இளைஞரணி செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மகளிருக்கான போட்டிகள், விளையாட்டு போட்டிகள் நடத்தி சிறப்பாக கொண்டாடுவது என்றும், கழகத் தலைவர் - முதல்வர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் மக்கள் நலத்திட்டங்கள் குறித்து தெருமுனை பிரச்சாரம் கூட்டம் நடத்த தீர்மானிக்கப்பட்டது .

இந்த கூட்டத்தில் நிர்வாகிகள் மோகனசுந்தரம், மன்னர் மன்னன், மகளிரணி சண்முகப்பிரியா, பொருளாளர் மயில்வாகனன், பால்பாண்டி, இளைஞரணி மாரி கண்ணன் தொ.மு.ச. முருகேசன், ஏ.எம்.ராசு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; நடிகை கஸ்தூரி என்ன பயங்கரவாதியா என்று பா.ஜ.க. தமிழிசை கேட்டிருக்கிறாரே ?

**பட்டணம் :** **ஆமாமய்யா; பயங்கரவாதச் சட்டத்தின் கீழ், எழுத்துச் சுதந்திரத்தைப் பயன்படுத்திக் கொண்ட சான்றோர்களையெல்லாம் கொடுமைகளுக்கு உட்படுத்திய அரசுதானே ஒன்றிய பா.ஜ.க. அரசு !**

**அடுத்தவர் மீது குற்றம் சொல்லும் முன், தன் முதுகைத் தானே பார்த்துக்கொள்ள வேண்டாமா ?**